(இ) கோரிக்கை எண் 43--பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,894,28,50,000/-, மூலதனக் கணக்கில் ரூ.253,22,28,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.5,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(19-4-2010)* காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

58. திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம், கழிவு நீர் அகற்றும் பணிகள் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசனை ஆகியவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தினை, ஆலோசகராக நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின்

11-3-2010 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

59. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 23-3-2010 ஆம் நாளிட்ட 91 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

60. (i) 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/2009) 24-11-2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என அறிவித்தும்; (ii) பதிவுத் துறை தலைவரை தமிழ்நாடு மாநிலத்திற்கான திருமணங்கள் தலைமைப் பதிவாளராக நியமித்தும்; (iii) பதிவு மாவட்டத்தின் மாவட்டப் பதிவாளரை அம்மாவட்ட திருமணப் பதிவாளராக நியமித்தும்; (iv) சார் பதிவாளர்களை அந்தந்தத் துணை மாவட்டங்களுக்கான திருமணப் பதிவாளராக நியமித்தும் மற்றும் (V) 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு விதிகள் இயற்றியது குறித்தும் உள் (நீதிமன்றங்கள்-IV) துறையின் 24-11-2009 ஆம் நாளிட்ட 987 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2009) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைத் திருமண தடை விதிகளை இயற்றியது குறித்து சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (SW5) துறையின் 30-12-2009 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 6/2007) 19(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. (i) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தனியார் பள்ளிகளின் வகுப்புகள் தொடர்பாக அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகார வரம்பிற்கு உரிய அலுவலராக செயல்படுவதற்கு அதிகாரமளித்தது

குறித்தும் மற்றும் (ii) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு, மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் ஒன்று அமைத்தது குறித்தும் பள்ளிக் கல்வித் (வரவு செலவு-1) துறையின் 4-3-2010 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2010) 17 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

63. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை விதிகள் இயற்றியது குறித்து பள்ளிக் கல்வித் (வரவு செலவு-1) துறையின் 4-3-2010 ஆம் நாளிட்ட 49 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2010) 17 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

64. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

65. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

43. மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

44. “கலைஞர் ஆட்சியில் கூட்டுறவுத் துறையின் பொற்காலச் சாதனைகள்” என்கிற சிறு நூல், 2006-2010. (தமிழ்)

45. கூட்டுறவுத் துறையின் “விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்” என்கிற சிறு நூல். (தமிழ்)

46. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தெட்டாவது அறிக்கை. (2009-2010)